RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s51

OPEN ACCESS

# ‘திராவிடம், திராவிடர்’ என்ற சொல்லின் வழி தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் முன்வைத்த மானிடத்திற்கான அரசியல்

**ச. ஜீவானந்தம் [அ, *]**

[அ] வரலாற்றுத் துறை, சிக்கிம் பல்கலைக்கழகம் (மத்திய பல்கலைக்கழகம்), கேங்டாக்-737102, சிக்கிம், இந்தியா.

# The Political Discourse of Thanthai Periyar E.V. Ramasami on the Concepts of ‘*Dravidam*’ and ‘*Dravidar*’

**S. Jeevanandam [a, *]**

[a] Department of History, Sikkim University (A Central University), Gangtok-737102, Sikkim, India

* Corresponding Author: jeeandm@gmail.com

Received: 03-08-2021
Revised: 15-04-2022
Accepted: 21-04-2022
Published: 10-05-2022

Check for updates

## ABSTRACT

The Brahmanical ideology substantiated the institution of caste in the Indian society. Different ethnic groups and rationalists started questioning the existing caste hierarchy in the latter half of the nineteenth century. They used different strategies according to their historical context to dismantle the caste structure. Mahatma Jotirao-Savitribai Phule, Babasaheb B.R. Ambedkar, Pandithar Iyothidasar and Thanthai Periyar E.V. Ramasami are few of the interesting personalities among them. The radicals were fearless in their work in the empowerment of the people, who were all suppressed in the name of caste, religion and culture. They used the words, dravidam/dravidar as an ideological tool to revive the cultural history of aboriginals and counter the Brahmanism in the society. Especially, Thanthai Periyar E.V. Ramasami and his ideological successors, who identified themselves as self-respecters, extensively used the words as an ideological tool to initiate the Cultural Revolution in the Tamil society. In this background, this paper studies the political discourse of Thanthai Periyar E.V. Ramasami on the concepts of ‘dravidam’ and ‘dravidar’.

**Keywords:** Thanthai Periyar E.V. Ramasami, Dravidiam, Dravidian, Self-Respect Movement

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பது தமிழக சமூக வெளியினில் ஒரு மிகப் பெரும் சமூகப் புரட்சியினை நிகழ்த்திக் காட்டியது. பிறப்பினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒருவரின் தகுதியினை நிர்ணயித்த இந்தியச் சாதியச் சமூகத்தினில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடியல் என்பது தமிழக அரசியல், சமூகம் மற்றும் பண்பாட்டு வெளியினில் சாத்தியம் ஆனது குறிப்பிடத்தக்கது ஆகும். அந்த மாற்றத்திற்கு மிக முக்கிய காரணியாக இருந்தவர் சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனரான தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் ஆவார். சக மனிதர்களின் சுயமரியாதையான சுகவாழ்வே முக்கியம் என்ற தந்தை பெரியார் அவர்கள் மானிட முன்னேற்றத்திற்காக பல்வேறு வகையிலான ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை எந்தவொரு கொள்கைச் சமரசமுமின்றி மேற்கொண்டார். அந்த வகையினில் தந்தை பெரியார் அவர்கள் ‘திராவிடம், திராவிடர்’ என்ற சொல்லின் வழி பேசிய அரசியல் என்பது மிக முக்கியம் ஆகும். இந்தக் கட்டுரையானது தந்தை பெரியார் அவர்கள்

'திராவிடம்/திராவிடர்'என்ற சொல்லினை எவ்வாறு கருத்தியல் ரீதியாக கையாண்டார் என்பதை விளக்க முற்படுகின்றது.

## சுயமரியாதைக்காரர்களின் வாதம்

'திராவிடன்' என்று தன்னை பிரகடனப்படுத்திய தந்தை பெரியார் அவர்கள் தன் புகழ் என்றும் நிலைக்க வேண்டும் என்ற நினைவில்லாது பிறருக்காகத் தொண்டு செய்ய வேண்டும் என்றார் (Aanaimuthu, 2009). தன்னைப் பற்றி குறிப்பிடும் பொழுது கூட,

"உணர்சிக்கு இடமில்லாத, மானத்தைப்பற்றிக் கவலையில்லாத திராவிட மக்களிடத்தில் நல்ல பேர் வாங்கவேண்டுமென்ற கவலை சிறிதுமில்லை. அப்படிப் போலி நல்ல பெயரின் மீது எனது வாழ்வு ஏதாவது தொண்டாற்ற வேண்டும், அதில் முதன்மையாக, திராவிடன் இழிவு நீங்க வேண்டும் என்கின்ற ஆசையும் கவலையுமே தவிர, வேறு ஒன்றுமே எனது கவலையாக இல்லை. என் வாழ்வைப் பற்றி எனக்குக் கவலையில்லை, எனக்கு வேறு அடைய வேண்டிய சாதனமும் இல்லை." என்கின்றார் (Periyar. 1947).

அத்தகைய தந்தை பெரியார் அவர்கள் 'திராவிடர்', 'பார்ப்பனர் அல்லாதோர்' (Non-Brahmin), 'சூத்திரர்', 'ஆதிதிராவிடர்', 'பஞ்சமர்', 'தமிழர்', 'தமிழ் மக்கள்', 'பார்ப்பனர்' மற்றும் 'ஆரியர்' போன்ற பல சொல்லாடல்களை பல்வேறு இடங்களில் பல்வேறு பொருள்படும்படி பல்வேறு இனக்குழுக்களைப் பற்றி குறிக்க அந்தச் சூழலிற்கு இணங்க தெளிவாக பயன்படுத்தி வந்துள்ளார் என்பதனை அவரது உரைகளின் மூலம் அறியமுடிகின்றது. மேற்குறிப்பிட்ட இத்தகைய சொல்லாடல்களை சில சமயங்களில் ஒரே கட்டுரையில் பல இடங்களிலும் குறிப்பிடுகின்றார். அது பயன்படுத்தப்படும் இடத்தினைப் பொருத்து, அதன் கருத்தாக்கமானது, அச்சொற்கள் அதற்குரிய கருத்தியல் பொருளினைப் பெற்று, அதன் உட்பொருளானது மாறுபட்டுக் கொண்டு வந்துள்ளதனை வரலாற்று பின்புலத்துடன் காணும் பொழுது தெளிவாக அறியமுடிகின்றது.

வரலாற்றின் பல்வேறு படிநிலைகளில் பார்ப்பனீயத்தின் ஆணி வேறானது எவ்வாறு சாதியக் கட்டுமானத்தினை இந்திய சமூக வெளியினில் நிலை நிறுத்தியது என்பதை நன்குணர்ந்தவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார். அவ்வாறு இருந்தபோதும் வரலாற்றின் தொன்மத்தினால் மட்டுமே நவீன உலகினில் மானிட முன்னேற்றத்திற்கு எந்த ஒரு தனித்த சிறப்பும் இல்லை என்று கருதிய தந்தை பெரியார் அவர்கள் மானுட முன்னேற்றமும், விடுதலையுமே பிரதானமானது என்று ஆணித்தரமாக நம்பினார். தந்தை பெரியார் அவர்களின் கூற்றின்படி, வரலாற்றாசிரியர்களின் ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் உலகிலேயே முதன்முதலில் தோன்றிய நாடு தமிழ்நாடு என்றும், உலகிலேயே மனித வர்க்கம் தோன்றிய இடம் நம் தென்னாடு என்று இருந்த பொழுதும், இந்தமாதிரி பூர்வீகப் பெருமைகளால்-பழங்கதைகளால் நமக்கு ஆவது ஒன்றும் இல்லை என்று குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 17-09-1939). உலகம் இருபதாவது நூற்றாண்டில் இருக்கிறது, தமிழர்களாகிய நாம் பல நூற்றாண்டுகளுக்கும் முந்திய நிலையில் இருக்கிறோம், இன்னமும் சொல்ல வேண்டுமானால்-புராண காலத்திலும், பழைய தமிழ் இலக்கிய காலத்திலும் இருக்கிறோம். இவை சுருக்கமாகச் சொல்லப்பட வேண்டுமானால், காட்டுமிராண்டி (primitive people) காலத்தவர்களாக இருக்கிறோம். இதை மறந்துவிடாதீர்கள், என்கிறார் (குடி அரசு, 6-11-1943). இங்கே காட்டுமிராண்டி என்ற சொல்லினை பிற்போக்கின் குறியீடாகவே, அதாவது primitive people என்ற பொருள்படும் படியே தந்தை பெரியார் அவர்கள் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இதன் மூலம் 'தமிழர்' அல்லது 'திராவிடர்' என்ற அடையாளத்தினை வரலாற்று பெருமிதத்துடன் மட்டுமே அணுகாமல் நிகழ்கால சாதிய சமூக விடுதலையின் மீட்பாகவே தந்தை பெரியார் அவர்கள் அணுகினார் என்பதை அறியமுடிகின்றது.

## பார்ப்பனீய ஆதிக்கத்தினை எதிர்த்த தந்தை பெரியார் அவர்கள்

எப்பொழுதும் தந்தை பெரியார் அவர்கள் தனது சுயவெறுப்புகளைக் கடந்தே ஒவ்வொரு சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளையும் அணுகினார். பார்ப்பனீய ஆதிக்கத்தின் அடிநாதத்தினை எந்த

சமரசமுமின்றி எதிர்த்த தந்தை பெரியார் அவர்கள் பார்ப்பனரை சமூகத்தினில் இருந்து முற்றும் புறந்தள்ள ஒரு போதும் முயற்சிக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும். இந்தப் புள்ளியே தந்தை பெரியாரை மற்றவர்களைக் காட்டிலும் குறிப்பாக எந்தவொரு அடிப்படைவாதிகளைக் காட்டிலும் மேலே வைத்துள்ளது. தந்தை பெரியார் அவர் குறிப்பிடுகையில் நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லன் என்றும், பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கை குணமாக இருக்குமோ, அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது என்றும் பார்ப்பனர் மீதான மதிப்பீட்டினைப் பற்றி வரையறுக்கிறார் (விடுதலை, 1-1-1962).

1962-ம் ஆண்டு விடுதலையில் வெளியான "பார்ப்பனத் தோழர்களுக்கு" என்ற அறிக்கையில், பார்ப்பனர்களைக் கேட்பது எல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள், எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவுபடுத்தி, எங்களுடைய சுயமரியாதையைக் கொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை என்று குறிப்பிட்டுள்ளார் (குடி அரசு, 15-08-1926). அதேபோல், ஒருவர் உண்மைத் தமிழராகி, தமிழ்நாடு தமிழருக்காக, தமிழர் வாழ்வு மானமும் உயர்வும் பெறும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையினைக் கொண்ட தந்தை பெரியார் அவர்கள் மற்றபடி அந்நிய மக்கள் மீது வெறுப்பு வேண்டாம், துவேஷம் வேண்டாம், பொறாமை வேண்டாம். நம் ஈன நிலைமீது வெறுப்பும் துவேஷமும் கொண்டு வீறிட்டு எழுங்கள் என்றே வலியுறுத்தினார் (குடி அரசு, 5-11-1939).

"பார்பனரும், தி.க. வும் தோழர்களே!" என்ற தலைப்பினில் தந்தை பெரியார் ஆற்றிய உரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பார்ப்பனர்கள் இந்த நாட்டில் வாழக்கூடாது என்றோ, இருக்கக்கூடாது என்றோ திராவிடர் கழகம் வேலை செய்யவில்லை. திராவிடர் கழகத்தின் திட்டமும் அதுவல்ல. திராவிடர் கழகத்தினுடைய திட்டமெல்லாம், திராவிடர் கழகமும் நானும் சொல்லுவதெல்லாம், விரும்புவது எல்லாம், நாங்களும் கொஞ்சம் வாழவேண்டும் என்பதுதான். இந்த நாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத்தன்மையோடு சமத்துவமாக இருக்கவேண்டும் என்பது தான்... அவர்கள் அனுசரிக்கிற சில பழக்க வழக்கங்களையும், முறைகளையும் தான் நாங்கள் எதிர்க்கிறோம். இது, அவர்கள் மனது வைத்தால் மாற்றிக்கொள்வது பிரமாதமான காரியம் இல்லை... நமக்குள் மனித தர்மத்தில் பேதம் இருபானேன்? நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக்கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. எனவே, முயற்சியில் பலாத்காரம் சிறிதும் இருக்ககூடாது என்பதிலும் எனக்குக் கவலை உண்டு... என்கிறார் (விடுதலை. 8-1-1953).

## தமிழர் (திராவிடர்) பண்பாட்டு மீட்டெடுப்பு

வரலாற்றினில் சிறப்பாக இருந்த தமிழர்கள் ஏன் இவ்வளவு கீழான நிலைமைக்கும், இழிவான தன்மைக்கும் செல்ல வேண்டும் என்ற சிந்தனையை ஆரியரும் திராவிடரும் எனும் தலைப்பினில் முன்வைத்த தந்தை பெரியார் அவர்கள் சமூகத்திலும், அரசாங்கத்திலும் உயர்ந்த பதவிகள் அனைத்திலும் பார்ப்பனரின்/பார்ப்பனீயத்தின் ஆதிக்கம் எவ்வாறு நிலை பெற்று வந்தது என்ற கேள்விக்கான பதில்களை அறிவியல் ரீதியாகவே தந்தை பெரியார் அவர்கள் முன்வைத்தார் (குடி அரசு, 17-09-1939) (விடுதலை, 6-5-1954). திராவிட மக்கள் அவர்களின் இழிவில், ஈனத்தில் கவலை இல்லாமல் தங்கள் பணம், பட்டம், பதவி ஆகியவைகளில் அதிகக் கவலை கொண்டிருப்பவர்களாக இருப்பதன் காரணம் என்னவென்று தந்தை பெரியார் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்து அதற்கான விடையினையும் ஆக்கபூர்வமாக பெறவே விளைந்தார் (குடி அரசு, 03-02-1945).

திராவிடர்களுக்கு அவர்களது சமயம் எப்படிப்பட்டது, சடங்குகள் எப்படிப்பட்டவை, தர்மங்கள் எப்படிப்பட்டவை, முயற்சிகள் எப்படிப்பட்டவை, சகவாசம் எப்படிப்பட்டவை, கவலை எப்படிப்பட்டவை, பொது நாணயம் எப்படிப்பட்டவை, தங்கள் சமுதாயத்திற்குச் செய்யும் தேவை எப்படிப்பட்டவை, அவர்களது வாழ்வில் அவர்களது பிறவி எத்தனை என அறியாமல் உள்ளனர் என்ற தந்தை பெரியார் அவர்கள் அவ்வாறு ஆராய்ந்தால் தமிழர் இழிவுக்குக் காரணங்கள் எவைஎவை என சுலபமாய்க் கிடைத்துவிடும் என்கின்றார் (குடி அரசு, 03-02-1945) (குடி அரசு, 27-11-1943). தமிழருக்கு அவர்களின் அஸ்திவாரம் என்ன என்பது பற்றி தெளிவு ஏதுமில்லை என்றார் தந்தை பெரியார் அவர்கள். அதாவது,

தமிழர் என்பவர் யார்? அவர்களுக்குச் சொந்தம் என்பது எது? இலட்சியம் என்ன? என்பவைகள் பற்றி ஏதும் தெரியாதவராகவும், ஆதாரம் இல்லாதவராகவும் இருக்கிறார்கள். ஆகவே அஸ்திவாரம் இல்லாக் கட்டிடம் வெடிப்புக் காணுவதும் அதிருவதும் அதில் (மானமோ, மேன்மையோ) குடியிருக்க மக்கள் பயப்படுவதும் இயற்கைதானே என்ற உவமையினைக் குறிப்பிட்டு, அதுபோலவே, தங்களுக்குச் சொந்தம், உரிமை இன்னது என்று தெரியாதவர், தொட்டதற்கெல்லாம் அயலாரிடம் கெஞ்சுவதும், ஒண்டுவதும், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுப் பின்தள்ளிவிட்டுப்போய்த் தன்காரியம் மட்டும் பார்த்துக்கொள்வதும் இயற்கைதானே என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 27-11-1943).

“நம் தாழ்மைக்கு காரணம்” என்ற கட்டுரையில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவதாவது, தமிழருக்கு என்று ஒரு நிறுவனம் என்று ஒன்று கிடையாது. அதுமட்டுமல்லாமல் வேறு எதனுடனாவது சேர்த்துதான் தன்னைத் தமிழன் என்று காட்டிக்கொள்ள வேண்டியவராய் இருக்கின்றார்கள். அப்படி இல்லாவிட்டால், பார்ப்பனரல்லாதவர், முஸ்லிமல்லாதவர், கிறிஸ்தவரல்லாதவர், இந்து அல்லாதவர் என்பது போன்ற “அல்லாதவர்” என்கின்ற பெயரால்தான் தன்னைக் காட்டிக் கொள்ள முடிகிறது என்கின்றார் (குடி அரசு, 27-11-1943).

இங்கே, கவனிக்க வேண்டியது என்னவெனில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்கள் சாதியக் கட்டுமானத்தின் பிடியினிலிருந்து பெருமளவு பங்கு பெறாமல், ஒருமித்த இனக்குழுவாக செயல்பட்டு, சமூக மேம்பாடு அடைவதால் அவர்களை சில சந்தர்ப்பங்களில் தந்தை பெரியார் அவர்கள் தனித்து குறிப்பிட்ட பொழுதும், முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் வழக்கமாக அடிப்படைவாதிகள் கட்டமைப்பது போன்று தனித்துவிடாமல், தமிழ்நாட்டில் உள்ள ‘தமிழ் மக்களாகிய பழம்பெரும் சமூகத்தினர்’ என்றே தெளிவாகவே குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 5-11-1939). தமிழ்நாட்டில் இருப்பவரெல்லாம் தமிழர் தான் என்று குறிப்பிடும் தந்தை பெரியார் அவர்கள் முஸ்லிம்கள் யார் என்ற கேள்விக்கு அவர்கள் இங்கே இருந்த பூர்வகுடிகள் தாம் என்று கூறி, அவர்கள் ஆப்கனிஸ்தானத்திலிருந்து வந்தர்களல்லர் என்கின்றார். ஆனால், அதேவேளையினில், பார்ப்பனர்கள் அப்படியல்ல என்று குறிப்பிடும் தந்தை பெரியார் அவர்கள், ஆரியர்கள் வெளி நாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்கள் என்றும், அவர்களுக்கும் நமக்கும், சட்டப்படிக்கல்லாத வழியில் இரத்தக் கலப்பு இருக்கலாமே தவிர, வேறு எந்த வகையிலும் அவர்களுக்கும் நமக்கும் இரத்த சம்பந்தமில்லை என்றும் குறிப்பிட்டு, இந்த சமூக போராட்டம் என்பது சாதியக் கொடுமையை ஒழிக்கவே என்று குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 31-12-1939).

சிலவேளையினில், தமிழர்களும், தமிழ் அறிஞர்களும் கூட தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ் பேசுகிற எவரும், அவர் நம்மை எவ்வளவு இழிவாகவும், மானமற்ற தன்மை உண்டாகும்படியும் நடத்தினாலும் கூட அவர்கள் எல்லோரும் தமிழர்களே என்று வாதிடுவதுடன், ஆதாரம் காட்டவும் செய்கின்றார்கள் என்ற தந்தை பெரியார் அவர்கள் தமிழர்கள் நடந்துகொள்ளுவதற்கு என்று தனிமுறைகளும் வழிதுறைகளும் இல்லை என்பதுடன், தமிழனுக்கு என்று தனித்த முறையில் ஆரியம் கலவாத இலக்கியமோ, தனி நடை, உடை, பாவனைகளோ கிடையாது என்று எடுத்துரைக்கின்றார் (குடி அரசு, 27-11-1943).

மேலும், திராவிட சமுதாயத்தினர் மானங்கெட்ட சமுகத்தினராய், சூத்திரராய், நான்காம்-ஐந்தாம் சாதியாய், வேசி மக்கள் மற்றும் தாசி மக்களாய், கல்வி, செல்வம், மனவாழ்வு, உழைத்த கூலி கூட இல்லாமல் மிருகங்களிலும் கேவலமாய், உரிமை இழந்து, மனிதத் தன்மை இழந்து, ஈன வாழ்வில் அழுத்தப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம் என்பது இந்துவாய் இருப்பதலல்லாமல் வேறு என்ன இருக்க முடியும் என்றார் தந்தை பெரியார் (Periyar, 1947). ‘இந்து’ சமயமும், பார்ப்பனரும் திராவிட மக்களை இழி பிறப்பானவர்கள் என்றே வரையறுக்கின்றது என்றார் தந்தை பெரியார் அவர்கள் ஒரு சிறு கூட்டத்தாரின் மாயவாழ்வுக்கு இத்தனை கோடிப்பேர்கள் இந்துக்களாக (சூத்திரர்களாக) இருப்பதா என்கிறார் (Periyar, 1947). இங்கே, ‘இந்து’ என்ற வார்த்தையினை ‘பார்ப்பனர் அடிமை’, ‘அடியேன்’, ‘தாசன்’, ‘நாய்க்குட்டி’, ‘அடிமை’ என்ற பொருளிலே குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 03-02-1945).

திராவிடர்கள் இன்று இவ்வளவு இழிந்த நிலையிலிருப்பதற்குக் காரணம் என்பது ஆரியப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடந்து வந்ததேயாகும் என்றார் தந்தை பெரியார் அவர்கள் ஆரியத்தையும் ஆரிய வழிபாட்டையும் பின்பற்றுவது திராவிடர் பண்பாகாது என்றார் (குடி அரசு, 14-10-1944). நாம் திராவிடர், இந்தநாடு திராவிட நாடு, இந்நாட்டு மக்கள், இந்நாட்டுப் பழங்குடி மக்கள், இந்நாட்டில் மேன்மையாய், நாகரிகத்தில் சிறந்து மானிடர்களாய் வீரர்களாய் வாழ்ந்தவர்கள் வீரத் திராவிடர்கள் என்ற பெயரை சரித்திர காலத்திற்கு முன்னிருந்து கொண்டவர்களாக இருந்தார்கள் என்றார் (குடி அரசு, 01-09-1945). அவ்வாறு இருந்த தமிழ் மக்கள் ஆரிய சூழ்ச்சியின் பயனாகவே சமுதாயத்தினில் ஆரியனுக்குத் தீண்டக் கூடாத கீழ் சாதியாய் மாற்றப்பட்டார்கள் என்றே தந்தை பெரியார் அவர்கள் கூறுகின்றார் (குடி அரசு, 5-11-1939). தமிழர்கள் மனிதத்தன்மை பெற அதிகமான கஷ்டம் ஒன்றும் அடைய வேண்டியதில்லை என்ற தந்தை பெரியார் அவர்கள், தங்கள் உடலில் இருப்பது ஆரிய இரத்தக் கலப்பில்லாத தனித் தமிழர் இரத்தம் என்று கருதிக்கொண்டு, தங்களின் சமய இயல், அரசியல், ஆரிய சம்பந்தமற்ற தனி இயல்கள் என்று கருதிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் மூலம் அறிவது 'திராவிடர்' என்ற சொல்லாடலினை பார்ப்பனீயத்தினைத் தவிர்த்த தமிழர் என்ற பொருள்படும்படியே அவர் கையாண்டார் என்பதேயாகும்.

பார்ப்பனீய அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று கருதி அதற்காக கோயில் கட்டுவதும், குடமுழக்கு செய்வதும், எண்ணிலடங்கா நன்செய் நிலங்களை நம்மவர்கள் (பார்ப்பனர் அல்லாதவர்கள்) தானமாக அளிப்பதை சாடிய தந்தை பெரியார் அவர்கள், அதன் அடிப்படையில் நோக்கும் பொழுது நாம் உயர்ந்தவர்களாக வாழ்ந்ததாகத்தானே வரலாறு கூறுகிறது என்கிறார். அப்படிப்பட்டவர்கள் எவ்வாறு கீழ்சாதியென ஆக்கப்பட்டார்கள் என்ற வினா எழுப்பியதுடன், எந்த நாட்டிலாவது அந்த நாட்டினைச் சார்ந்த உழைப்பாளிகளும், தர்மப் பிரபுக்களும் தாழ்ந்த சாதியாக இருக்கிறார்களா என்பதுடன், காட்டுமிராண்டிகளாக இருந்த மக்கள் கூட முன்னேறி வர திராவிடர் மட்டும் இழிசாதியினராய் இருப்பதா என்கிறார். அவ்வாறு அடிமைப்பட, தாழ்த்தப்பட்டதாக அமைய காரணம் என்பது பார்ப்பனர் இங்கே வந்தபிறகுதான் என்று பாபாசாகேப் அம்பேத்கார் மற்றும் இன்னும் பிற அறிஞர்கள் கூறுவது போலவே தந்தை பெரியார் அவர்களும் குறிப்பிடுகின்றார் (விடுதலை, 6-5-1954.).

வரலாற்று காலத்தை எடுத்துக்கொண்டால் நமக்குக் (பூர்வகுடிகளான ஒடுக்கப்பட்ட மக்கள்) கேடான ஆட்சியும், பார்ப்பனருக்கு/பார்ப்பனீயத்திற்கு நன்மையான ஆட்சியுமே நடந்து வந்திருக்கின்றது என்று குறிப்பிட்ட தந்தை பெரியார் அவர்கள் சேரன், சோழன், பாண்டியன் காலம் முதல் காமராஜர் பதவிக்கு வரும் முன்பு வரையில் எவரும் நூற்றுக்குத் தொண்ணூற்று ஏழு பேராக உள்ள இந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலை எடுத்துக்கொண்டு பாடுபட்டார்களா என்றால், சொல்ல ஒன்றுமே இல்லை என்றே தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகின்றார். அதாவது, அரசர்கள் எல்லாம் பார்ப்பனருக்கும், பார்ப்பனீயக் கருத்தியலுக்கும் அடிமையாக இருந்து, அவர்களுக்குத் தொண்டு செய்வதே மேலான புண்ணியம் என்று கருதி ஆண்டு வந்தார்கள் என்ற தந்தை பெரியார் அவர்கள், பார்ப்பனருக்குப் பிழைக்கக் கோயிலும், மானியமும், வேத பாடசாலையும் ஏற்படுத்தி, பார்ப்பனீயத்தின் ஆதிக்கத்தை வளரச்செய்யப் பாடுபட்டார்களே ஒழிய, இம்மண்ணின் மக்களின் நலனிலோ, கல்வியிலோ அக்கறை காட்டவில்லை என்றார் (விடுதலை, 6-4-1961).

அதேபோல் அடுத்து வந்த முகமதியர்களின் ஆட்சியிலும், பார்ப்பனருக்கு தேவையானவற்றை அவர்கள் செய்துவிட்டு தங்கள் ஆட்சியை நடத்திக்கொண்டு போனார்களே ஒழிய, இந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று குறிப்பிட்டதுடன், முகமதியர்களைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர்களின் ஆட்சியிலும் பார்ப்பனருக்குக் கல்வி, உத்தியோகம், பதவி முதலியன பெற வாய்ப்பளித்தார்களேயொழிய, நம்மைப் (ஒடுக்கப்பட்ட/பார்ப்பனர் அல்லாத மக்களைப்) பற்றி கவலைப்படவில்லை என்று வருந்திய தந்தை பெரியார் அவர்கள், நவீன கால இந்தியாவிலும் காமராஜர் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் வரையில் எவரும் இந்நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டாமல் பார்ப்பனருக்கும், அவர்களின் உயர்வுக்குமே பாடுபட்டு வந்தார்கள் என்கிறார் (*விடுதலை*, 6-4-1961).

ஆரியக் கொடுமையில் இருந்து ஆரியர் சூழ்ச்சியில் இருந்து, ஆரிய ஆதிக்கத்திலிருந்து தமிழன் மீள்வதே சுயராஜ்யம் என்று தந்தை பெரியார் அவர்கள் தமிழர் (திராவிடர்) பண்பாட்டு மீட்சியினைப்

பற்றி மிக ஆழமாகவே விவாதித்து வந்துள்ளார் (குடி அரசு, 5-11-1939). தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடும்பொழுது, தமிழர்கள் (திராவிடர்கள்) ஆரியர் ஆதிக்கத்திற்கு வந்தவுடன் தமிழர்களின் கலைகளை அழித்தும், அவர்களை கல்வி அறிவில்லாமல் செய்தும், மீறிப் படித்தவர்களைக் கொடுமைப்படுத்தி அழித்தும், அழிபடாதவர்களைத் தங்களுக்கு அடிமைப்படுத்தியும், தங்கள் சமயங்களையும், கலைகளையும் தங்கள் உயர்வுக்கு வழி வகுக்கும் கதைகளையும் தமிழ் மொழியினில் மொழி பெயர்த்து எழுதச் செய்தனர் என்றும், தமிழ் மக்களின் பிழைப்பையும் பெருமையையும் கட்டுப்படுத்தி ஆரியக் கருத்தியலுக்கான கூலிப்பிரச்சாரகராய் அவர்களை ஆக்கிக்கொண்டு, படிப்பு வாசனையற்ற திராவிட மக்களினை, ஆரியர்களின் அடிமைகளாகவே வாழ வேண்டியவர்களாக ஆக்கப்பட்டனர் என்கிறார் (குடி அரசு, 5-11-1939).

எந்தவொரு கருத்தினையும் தானாகவோ தான் மட்டுமோ சொல்லவில்லை என்று பெருந்தன்மையுடன் குறிப்பிடும் தந்தை பெரியார் அவர்கள் பார்ப்பனீயக் கருத்தியலை எதிர்த்த பொழுதும் தன் தனிப்பட்ட கருத்துக்களை விடுத்து சனாதன மதத்தின் ஆதார இலக்கியங்களையே அடி ஆதாரமாகக் கொண்டே தமிழர் (திராவிடர்) அடிமைப்படுத்தலுக்கான காரண காரியங்களை உரிய வரலாற்று தரவுகளுடன் ஆராய்ந்தார் (குடி அரசு, 01-09-1945).

இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியே இருந்து இங்கே குடிபெயர்ந்த பார்ப்பனர்கள் அல்லது ஆரியர்கள் தங்களின் ஆதிக்கம் நிலைபெறச் செய்ய அவர்களின் இறை நம்பிக்கைகளை இந்த நிலத்தின் பூர்வ குடிகள் மீது செலுத்தி, அவர்களின் ஆதிக்கம் நிலைப் பெறக் கோயில் போன்ற மத நிறுவனங்களையும், கடவுள் சிலைகளையும் செய்யச் செய்து பின் அத்தகையவற்றை நாம் தொட்டால் தீட்டு, சாமி செத்துப் போய்விடும் என்றனர், இதை பணம் படைத்தவர்களும், அறிஞர்களும் ஒப்புக்கொண்டதன் விளைவாக நாம் இப்படி நாசமாகிவிட்டோம் என்று குறிப்பிட்டு 'மோட்சம்' என்கிற வார்த்தையினாலும், 'சுயராஜ்யம்' என்கிற வார்த்தையினாலும், சமூக வாழ்க்கையிலும், அரசியலிலும் முறையே நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி ஆதிக்கம் பெற்று விட்டார்கள் என்று (குடி அரசு, 15-08-1926) தந்தை பெரியார் அவர்கள், மிருகங்களில் பார்ப்பாரக் கழுதை, பறைக் கழுதை என்ற பேதங்கள் இருக்கின்றனவா? என்கிறார் (விடுதலை, 6-5-1954).

வரலாற்றினில் 'சூத்திரன்', 'தஸ்யூ', 'தாசன்' என்கின்றதான சொற்கள் இந்துக்களின் (ஆரியர்களின்) புராதான வேதங்களிலேயே குறிப்பிடப்பட்டிருப்பதுடன், இவ்வேதங்கள் சூத்திரர்களையும், தஸ்யூக்களையும் எவ்வளவு வெறுக்க வேண்டுமோ, எவ்வளவு இழிவுபடுத்த வேண்டுமோ, எவ்வளவு கொடுமைப்படுத்த வேண்டுமோ அவ்வளவுக்கு மேலாகவே வெறுத்து இழிவுபடுத்திக் கொடுமை செய்ய ஏவுகின்றன என்று குறிப்பிட்ட தந்தை பெரியார் அவர்கள் வேதங்களுக்குச் செய்யப்பட்ட வியாக்கியங்களில் 'சூத்திரன்' என்றால் 'திருடன்' என்றும், 'தஸ்யூ' என்றால் 'கொள்ளை அடிக்கிற கூட்டத்தினன்' என்றும், 'தாசன்' என்றால் 'அடிமை' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றார். இதுவும் தவிர, இந்துக்களின் தர்ம சாஸ்திரங்கள் என்பவைகளான மனு தர்மம், பராசர ஸ்மிருதி, நாரதர் தர்மம், யக்ஞ வல்க்யர் தர்மம் போன்ற சாஸ்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும், இந்துமத புராண இதிகாசங்கள் என்பவைகளிலும் ஆரியர்கள் அல்லாதவர்களை இழிவாகவும், வெறுக்கத் தகுந்த படியாகவும், தாராளமாய்க் கொடுமை செய்து நன்றாகச் சுரண்டத்தக்க விதமாகவும், வலியுறுத்திக் கூறப்பட்டிருப்பதுடன், அவைகள் நமக்குள்ளாகவும் புகுத்தப்பட்டுவிட்டன என்ற வரலாற்று உண்மைகளைச் சமூக வெளியினில் முன்வைக்கின்றார் (குடி அரசு, 6-11-1943).

அதன் நீட்சியாக தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவதாவது, இந்த சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் ஆகியவைகள் எல்லாம் வேதத்தின் சாரங்களாக இருக்கின்றதாக கூறி, நமது கல்வியாளர்களுக்கும் அவையே தேர்வுப் பாடமாகவும், நமது பிள்ளைகளுக்கு அவையே பாடப் புத்தங்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டன என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமல்லாமல், அதன்மூலமே வேதசாரத்தை வலியுறுத்திக் கூற கடவுள் வாக்குகள், கடவுள் சரித்திரங்கள், கடவுள் நடத்தைகள், கடவுள் கதைகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றார் தந்தை பெரியார் (குடி அரசு. 6-11-1943).

அதேபோல், அரசாங்கத்தாரால் நீதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 'இந்து லா' (அதாவது இந்துக்களின் சட்டம்) என்பதும் மேற்கண்ட வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு அவைகளில் தேர்ச்சி பெற்ற வைதிகப் பார்ப்பன சாஸ்திரிகளையும், பார்ப்பன அறிஞர்களையும் கூட்டி வைத்து, அவர்களது கருத்துப்படி பார்ப்பனப் பிரமுகர்களால் ஏற்படுத்தபட்டவையாகும் என்பதோடு, பிராமணன், சூத்திரன், சத்திரன், வைசியன் அல்லாதவர்களை (அதாவது நம்மை) 'தாசி புத்திரர்கள்' என்றும், 'இந்து லா' சட்டத்தில் குறிப்பிடப்படுகிறது என்று குறிப்பிட்ட தந்தை பெரியார் அவர்கள் வெகு காலமாகவே, நீதிமன்றங்களில் நடக்கும் சொத்து பாத்தியம் முதலிய விவகாரங்களிலும் வருண முறைப்படி பிராமணனுக்கு ஒரு மாதிரியும், சூத்திரனுக்கு ஒரு மாதிரியுமாகவே தீர்ப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கோயில், குளம் (தீர்த்தம்) முதலிய பொது இடங்கள் பற்றிய உரிமைகளிலும், இந்த வருண முறையும், சூத்திர வருணத்தில் உள்சாதி முறையும், பல வகுப்புக்களுக்குத் தனித்தனி உரிமை பழக்க வழக்கம் முதலியவைகளையும் வைத்து நீதி செலுத்தப்படுகிறது என்றார். அவ்வாறே, நம் பெண்கள் விஷத்திலும், யாரை யார் மணந்து பிள்ளை பெற்றாலும், சாதி வருண முறைகளால் மனைவிக்கு ஜீவனாம்சமும் பிள்ளைகளுக்குச் சொத்துரிமையும் சரிவரக் கிடைக்காமல் போகின்றது என்கிறார் தந்தை பெரியார் அவர்கள்.

மேலும், இலக்கியங்களில், தமிழர்களை அசுரனாகவும், இராட்சனாகவும், ஆக்கி அவர்களை அழித்த சிவனும், விஸ்ணுவும் மற்றும் தமிழர்களை அழித்து அடிமைப்படுத்திய ஆரியக் கொடியோர்களும் இன்று தமிழர்களுக்கு கடவுள்களாய் இருக்க காரணம் என்பது, படித்த தமிழன் பண்டிதனாகிய பின், ஆரியர்களுக்கு கூலியாகவும், ஆரியர்கள் தங்கள் உயர்வுக்காக எழுதி வைத்துக் கொண்ட ஆதாரங்களை மொழிப் பெயர்த்து பிரச்சாரம் செய்ததல்லாமல், வேறு என்ன காரணம் என்ற வினாவினை எழுப்பினார் தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு, 5-11-1939). பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சிவபுராணம், விஸ்ணுபுராணம் ஆகிய ஆரியர்களின் உயர்வும் திராவிடர்களின் இழிவும் கொண்ட ஆதாரங்களைக் கம்பன் முதலிய தமிழ் அறிந்தவர்கள் தமிழில் மொழிப்பெயர்த்துப் பிரச்சாரம் செய்திருக்காவிட்டால் ஆரியர் உயர்வும் ஆரியக் கடவுள்களின் உயர்வும் தமிழர்களுக்கு இவ்வளவு ஏற்பட்டிருக்க முடியுமா என்பதுதான் தந்தை பெரியார் அவர்கள் தான் எழுப்பிய கேள்விகளுக்குச் சான்றுகள் என குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 5-11-1939.).

'அரக்கன்', 'அசுரன்', 'இராட்சன்' என்கின்ற பலமும் பராக்கிரமும் வீரமும் கொண்ட பெயர்கள் எல்லாம் தமிழர்களை-திராவிடர்களைக் குறிப்பது என்பதும், ஆரியர்களுக்கு எதிரிகளானதானாலேயே இப்பெயர்கள் எல்லாம் தமிழர்களுக்கு இடப்பட்டதே தவிர அந்தப்படிப் பிறவியில் யாரும் இல்லை என்ற வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் வாதங்களை தந்தை பெரியார் அவர்கள் தனது குடி அரசின் தலையங்கத்தினில் முன்வைத்தார். அதற்கு உதாரணங்களாக தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவது இதிகாச மரபினில் ஆரியரையும் அவர்தம் கொள்கைகளையும் எதிர்த்தவர்களான இராவணன் மற்றும் இரணியன் போன்றோர்களை இராட்சன் என்று கருதினால், அவர்களை ஆரியர்களிடம் காட்டிக் கொடுத்தும், சூழ்ச்சிக்கு உடந்தையாய் இருந்தும், பின் அந்த ஆரியர்களிடமே தஞ்சம் புகுந்தும் வாழ்வு பெற்ற விபிஷணன் மற்றும் பிரகலாதன் போன்றோர்கள் எவ்வாறு புனிதராக்கப்பட்டும், ஆழ்வராக்கப்பட்டும் இருக்க முடிகின்றது என்பதுடன், நரக அசுரனோ கிருஷ்ணனை எதிர்த்ததற்காகவே, மகாவிஷ்ணு என்கின்ற ஆரிய ஆண் கடவுளுக்கும், பூமிதேவி என்கின்ற ஆரிய பெண் கடவுளுக்கும் பிள்ளையாகப் பிறந்தவன் என்று இழிவுபடுத்தி, அசுரனாக ஆக்கபட்டுவிட்டான் என்று குறிப்பிடுகின்றார்.

இங்கே, 'நரகர்' என்பது பெரிதும் ஆரியரல்லாதவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். பொதுவாகவே 'நரன்' என்பது இந்தப் பூலோகத்தில் இருப்பவர்களுக்குப் பெயராகவும், இந்தப் பூமியிலேயே ஆரியர்களும் இருந்த பொழுதும், அவர்கள் தங்களைப் பூதேவர்கள் என்று எழுதிவைத்துக்கொண்டதால், இந்தப் பூமியில், தமிழ் நாட்டில், திராவிடத்தில் இருப்பவர்களுக்கு 'நரர்' என்றும், திராவிடர்களின் தலைவர்களுக்கு 'நரகர்', 'அசுரர்' என்றும், 'ஆரியர்' பெயர் வைத்து, திராவிடத் தலைவனை நரகாசுரன் என்று சொல்லிவிட்டு, கிருஷ்ணன் நரகாசூரனைக் கொன்றான் என்றும், அதைப் பண்டிகையாக கொண்டாட வேண்டுமென்றும், ஆரியர் சூழ்ச்சி செய்ததின் காரணம், ஆரியர்கள் தேவர்கள் என்பதையும், ஆரியர்களைத் தமிழன் எதிர்த்தால் அழிக்கப்பட்டுவிடுவான் என்பதையும்

பிராச்சாரம் செய்வதற்காகவேயாகும் என்பதோடு, ஆரியர்களுக்கு விரோதமானால் அவர்கள் 'அசுரன்', 'இராட்சதன்', 'அரக்கன்' போன்றவர்களாக ஆக்கப்படுகின்றார்கள் என்றும், அன்றியும் அக்கிரமமாக அழிக்கப்பட்டு விடுவார்கள் என்றும் 1939-ம் ஆண்டு குடி அரசு தலையங்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் இதிகாச புராணக் கதைகளைக் கட்டுடைக்கின்றார்.

இங்கே 'திராவிடர்' என்ற சொல்லினை தமிழ் மக்களையும், அவர் தம் கலாச்சாரத்தையும் குறித்து மட்டுமே தந்தை பெரியார் அவர்கள் பயன்படுத்தியதனையும், அச்சொல்லினை ஆரியப்/பார்ப்பனீயக் கலாச்சரத்திற்கு எதிரானதாகவோ, மாற்றாகவோ பயன்படுத்தியுள்ளதனையும் அறியமுடிகின்றது (குடி அரசு, 17-09-1939.). அதேபோல், இத்தகைய போராட்ட முன்னெடுப்புகளையெல்லாம் தந்தை பெரியார் அவர்கள் வெறும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவோ, வசதி வாய்ப்புகளுக்காகவோ மட்டும் முன்னெடுக்கவில்லை. தந்தை பெரியார் அவர்களின் கூற்றின்படி இந்தப் போராட்டங்கள் என்பது எல்லாம் சுயமரியாதைப் போராட்டமே அல்லாமல், உத்தியோகத்திற்காகவே செய்யும் உத்தியோகப் போராட்டம் என்பது மட்டுமல்ல என்று குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 15-08-1926).

'திராவிடர்' அடையாளமாக தந்தை பெரியார் அவர்கள் வரலாற்று வெளியினில் முன்வைத்தவர்கள் கபிலர், பாய்ச்சலூரார், அவ்வையார், திருவள்ளுவர் மற்றும் சித்தர்களாகவே இருந்து வந்துள்ளனர். மேற்குறிப்பிட்ட அறிஞர்களைப் பற்றி தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடும் பொழுது அவர்கள் எத்தனையோ ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகவே இப்பார்ப்பனரின்/பார்ப்பனீயத்தின் கொடுமைகளை நன்கு உணர்ந்த 'நம் தமிழ் மக்கள்' என்றும், அத்தகைய பார்ப்பனீயக் கொடுமையிலிருந்து தப்ப வேண்டுமென்று எவ்வளவோ பிரயத்தனம் செய்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 15-08-1926).

மேலும், அவரின் கூற்றின்படி, நமது சித்தர்களெல்லாம் பார்ப்பனர்களின்/பார்ப்பனீயத்தின் கொடுமைகளையெல்லாம் மிகத் தெளிவாய் எடுத்து கூறியிருக்கின்ற காரணத்தினாலேயே, பார்ப்பனர்கள் சித்தர் நூல்களை ஒழித்தும், சித்தர் உபதேசங்களையெல்லாம் மறைத்தும், இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலான நூல்களைப் பார்ப்பனர்களுக்கு/பார்ப்பனீயத்திற்கு அனுகூலமாக எழுதியும், அவை அவர்களுக்குச் செல்வாக்கு உண்டாக்கி, அவற்றை படித்தால் மோட்சம் என்று சொல்லியும் நம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்று குறிப்பிடுகிறார். கபிலர், பாய்ச்சலூரார், அவ்வையார், திருவள்ளுவர் முதலிய பெரியோர்கள் தாம் செய்திருக்கும் நூல்களினாலும், தங்களுடைய உபதேசங்களினாலும் அய்யாயிரம் வருடங்களுக்கு முன்பே பார்ப்பனர்களின்/பார்ப்பனீயத்தின் கொடுமையை வெளிப்படுத்தி, அவைகளை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 15-08-1926). இங்கே 'திராவிட' அல்லது 'தமிழ்' அடையாளமாக கபிலர், பாய்ச்சலூரார், அவ்வையார் மற்றும் திருவள்ளுவர் போன்றோரையே தந்தை பெரியார் அவர்கள் முன்னிறுத்துகின்றார்.

## 'திராவிடர்' என்பது 'பார்ப்பனர் அல்லாத அல்லது பார்ப்பனீயத்தினை உட்கொள்ளாத தமிழர்' என்ற உணர்வே

'திராவிடர்' மற்றும் 'தமிழர்' என்பதனை அடிப்படைவாதிகள் வரையறைப்பதைப் போன்று பிறப்பின் அடிப்படையில் மட்டுமே தந்தை பெரியார் அவர்கள் அறுதியிடவில்லை. அதனை ஓர் உணர்வாகவும், பகுத்தறிவின் குறியீடாகவும், சுயமரியாதையின் அடையாளமாகவுமே தந்தை பெரியார் அவர்கள் வரையறுக்கின்றார். ஒருவர் திராவிடர் கழகத்தின் உறுப்பினராக சேர்ந்துவிட்டதினால் மட்டுமே உண்மையான திராவிடராய் ஆகிவிட முடியாது என்றும், திராவிடர் பண்பு என்பது அவர்களிடம் காணப்பட வேண்டும் என்றும், திராவிடர் கொள்கை என்பதனை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்மென்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 14-10-1944).

அதேபோல், 'பார்ப்பனீயம்' என்பதும் பிறப்பின் அடிப்படையில் மட்டும் நிகழாது என்ற சமூக அறிவியல் புரிதலுடனேயே தந்தை பெரியார் அவர்கள் 'பார்ப்பனர்', 'பார்ப்பனீயம்' என்ற

சொல்லாடல்களைப் பிரித்தறிந்து பயன்படுத்தினார். இரயில்வே சர்வீஸ் கமிஷன் கமிட்டி அங்கத்தினரில் ஒருவரான கான்பகதூர் அப்துல் கரீம் என்ற நபரின் அடிப்படைவாதப் போக்கினைப் பற்றி குறிப்பிடும் வகையினில் அவரைக் குறித்து கூறும் பொழுது அவர் முஸ்லிம் என்று சொல்லப்பட்டாலும் அவரும் 'முக்கால் பார்ப்பனர்' என்று குறிப்பிட்டுள்ளார் (Periyar. 1947). இது போன்ற நிகழ்வுகள் பார்ப்பனீயம் என்ற சொல்லை மதங்களைக் கடந்தும் கருத்தியல் ரீதியாகவே தந்தை பெரியார் அவர்கள் எதிர்கொண்டார் என்பதைக் காட்டுவதாக அமைகின்றது.

தந்தை பெரியார் அவர்கள் 'திராவிடர்' என்ற சொல்லினை 'பார்ப்பனர் அல்லாத தமிழ் பேசும் மக்களான, மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும், கலாச்சாரத்தின் பெயராலும் ஒடுக்கப்பட்டவர்களைப்' பற்றிக் குறிக்கவே பயன்படுத்தினார் என்பதை அவரின் எழுத்துக்களின் மூலமும், சொற்பொழிவின் மூலமும் தெளிவுபடுத்திக் கொள்ள முடிகின்றது. 1945-ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிட வாலிபர் சங்க ஆண்டு விழாவில் "திராவிட மக்களே! அல்லாவிட்டால் பார்ப்பனரல்லாத மக்களே!!" என்றே தனது சொற்பொழிவின் தலைப்பாக தந்தை பெரியார் அவர்கள் பயன்படுத்தினார் (குடி அரசு, 03-02-1945). அந்தச் சொற்பொழிவினில் தங்களை 'திராவிட மக்கள்' என்று ஒப்புக்கொள்ள ஒருவருக்கு விருப்பமில்லையெனில் 'பார்ப்பனரல்லாத மக்கள்' என்றாவது ஒப்புக்கொள்வீர்கள் என்று கருதித்தான், 'அல்லாவிட்டால் பார்ப்பனரல்லாத மக்களே' என்று தலைப்பில் குறிப்பிட்டோம் என்று தந்தை பெரியார் அவர்கள் அழுத்தமாக திருத்தமாக குறிப்பிடுகின்றார். "திராவிடர் கடமை" என்ற தலைப்பினில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடும்பொழுதும் 'தமிழர்' என்ற சொல்லாடலை பார்ப்பனர் அவர்தம் ஆதிக்கத்திற்கு எதிராகவே அவர் பயன்படுத்தினார் (விடுதலை, 15-07-1971)

"தமிழ்நாடு மாணவர் நிலை" என்ற தலையங்கத்தினில் திராவிட மாணவர்களின் நலன் குறித்து தந்தை பெரியார் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் (குடி அரசு, 24-02-1945).

"படித்தவர்களுக்குச் சமயமும் சமய ஆதாரங்களில் பண்டிதப் பெருமையுமே இலட்சியமாக இருந்து வந்திருக்கிறது. இதனால், எவருக்கும் நாட்டைப்பற்றி கவலைப்பட இடம் இல்லாமல் போய்விட்டது. உத்தியோகம் பெறுவதும் பணம் சம்பாதிப்பதுமே மனிதனின் இலட்சியமாக ஆகி, மக்களெல்லாம் இதற்காகவே படிக்க வேண்டும் என்று ஆகிவிட்டால், தமிழ் மகனுக்கு இருக்கிற சூத்திரப் பட்டமும், தீண்டாமை நிலையும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கும் சாதி, மதம், குளம், சாமி, சடங்கு ஆகியவைகள் ஒழிக்க யார் எங்கிருந்து வருவார்கள். இதுவரை மாணவர்கள் செலுத்திவந்த நாட்டுணர்ச்சியும் இன உணர்ச்சியும் ஆரிய நாட்டிற்கும் ஆரிய இனத்திற்குமே பயன்பட்டு வந்தது. அதைத்தான் இப்போது தமிழ்நாட்டிற்கும் தமிழர் இனத்திற்கும் பயன்படத் திருப்பவேண்டுமென்கிறோமே ஒழிய, புதிய துவக்கம் ஒன்றும் இல்லை. இன்றைய தமிழ் (திராவிட) மாணவர்கள் தங்கள் படிப்பைக் காட்டிலும் தங்கள் நாட்டினுடையவும், இனத்தினுடையவும் விடுதலையும் மேன்மையும் சிறந்தது என்பதைச் சிந்தனையில் வைத்துத் தற்காலம் அவர்களுக்குள் எழுந்திருக்கும் உணர்ச்சியைப் பயன்படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

மேலும், தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவதாவது,

"இன்றைய நிலையில் தமிழர்கள் (திராவிடர்கள்) ஓர் அளவு முன்னேற்றப் பாதையில் செல்லுகிறார்கள். அவர்கள் அடைய உரிமையுள்ள இடத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூற முடியாது (விடுதலை, 15-07-1971)

இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து என்ற தலைப்பினில் உரையாற்றிய தந்தை பெரியார் அவர்கள், நல்ல உத்தியோகம் பெற்ற திராவிடர் (தமிழர்)களில் பலர் இனப்பற்று அற்ற இனத் துரோகிகளாக, அளவுக்கு மீறிய சுயநல அயோக்கியர்களாக ஆகிவிடுகிறார்கள் என்றதுடன், பெரிய பதவியில் இருக்கும் திராவிடர்கள் ஒருவராது தன்னைத் திராவிடன் என்றோ, தமிழனாயிற்றே என்றோ கருதுகிறவர் உண்டா என்ற கேள்வியினைக் கேட்டதுடன், அவர்கள் நல்ல பேர், அந்தஸ்து, உயர்வு பெறவேண்டுமானால், பார்ப்பனர்களின் ஆசீர்வாதம், மங்களாசாசனம், சடகோபம் போன்றவற்றை பெற்றே ஆகவேண்டும் என்று கருதி செயல்படுகின்றனர் என்று குறிப்பிட்டதுடன், நூற்றுக்கு எழுபத்தைந்து உயர்பதவிகளைத் திராவிடர்கள் அடைந்தார்களேயானாலும், அவர்கள் அப்பதவியினை

அடைந்தவுடன், திராவிட இரத்தம் என்பது பார்ப்பன அடிமை இரத்தமாக மாறும்படி 'இனாக்குலேஷன்' செய்யப்பட்டவர்களாக ஆகின்றனர் என்கிறார் (Periyar. 1947).

மேற்குறிப்பிடப் பட்டதற்கு உதாரணமாக தந்தை பெரியார் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வினைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

தோழர் (புலவர், கனகசபை என்னும்) பொன்னம்பலம் என்பவர் ஒரு தமிழ்ப் புலவர் அவர் சேலம் அய்ஸ்கூலில் ஒரு புலவர். அவர் சிறிது திராவிட உணர்ச்சி உள்ளவர், அந்த உணர்ச்சி என்னவென்றால் முடம், மொக்கை இல்லாமல், சுத்தமான தமிழில் கூடியவரை பேசுபவர். அவர் பேசுவதைக் கண்டால் எந்தப் பார்ப்பனருக்கும் கோபம் வரும் வடமொழிக் கலப்பில்லாமல் பேசுபவர். அதுதான் அவரிடம் பார்ப்பனருக்குப் பிடிக்காத காரியம் என்று கூறுகிறார்.

“நாம் இந்துக்களா?” என்ற தலைப்பினில் தந்தை பெரியார் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“நம்மை, 'இந்துக்கள்' என்று சொல்லிக்கொள்கிறோம் என்றாலும், அரசாங்க ஆதாரங்களில் நமக்கு 'முகமதியரல்லாதார்' என்கின்ற பெயர் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இந்துக்கள் என்ற பெயர் கிடையாது. இதிலிருந்து நமக்கு என்ன ஏற்படுகின்றதென்றால், நமக்குச் சமுதாயத்தின் பெயராலும் (ஆதாவது நாட்டின் பெயராலும்), மத்தத்தின் பெயராலும், நாட்டின் பெயராலும் ஒரு குறிப்பிட்ட பெயர் கிடையாது என்பதேயாகும். இது தவிர, சமூகத்தின் பெயராலும், நமக்குப் 'பார்ப்பனரல்லாதார் சமூகம்' என்கின்ற பெயர்தான் இருந்து வருகிறதே தவிர, அந்தப்படியே நாமும் சொல்லி வருகிறோமே ஒழிய, வேறு நம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும்படியான “ஒரு எதிர்மறை அல்லாத பெயர்” கிடையாது. அப்படி இருந்தும் சமயத்தின் பெயராலும் சட்டத்தின் பெயராலும் இந்துக்களுக்குள்ளாகவே நாம் நாலம் சாதியார், அய்ந்தாம் சாதியர் (சதுரன், பஞ்சமன்) என்பதாக, அதாவது சூத்திரன், கீழ் மகன் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படுகிறோம் என்பதோடு, அதற்கேற்றதான சட்ட உரிமையும் சமுதாய உரிமையும் நடப்பும்தான் பெற்று வருகிறோம் (குடி அரசு, 6-11-1943).

தந்தை பெரியார் அவர்கள் இந்திய இரயில்வே துறையினில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கமிட்டியின் செயல்பாடுகளைப் பற்றியும், அங்கே நிகழ்ந்த சாதிய ஏற்ற தாழ்வுகளைப் பற்றியும், பார்ப்பனீயத்தின் கொடுமைகளைப் பற்றியும் குறிப்பிடும் பொழுது, அறிமுகப்படுத்தப்படும் கமிட்டியினால், பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கு, திராவிடர்களுக்கு ஏதாவது கடுகளவு நீதியோ, கருணையோ, உரிமையோ கிடைக்கும். என்று எவர்தான் கருதமுடியும் என்று குறிப்பிட்டு, உத்தியோகம் கொடுக்கப் படுவதில் எந்தவொரு வகுப்பார் தகுதியாய் இருந்தாலும், முதலாவதாகப் பார்ப்பனர்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பெருத்த எதிர்ப்பு இருந்தால் அது ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டுவிடும் என்றும், ஆங்கிலேயருக்குக் கொடுக்க முடியாததாய் ஏற்பட்டுவிட்டால், வேறொரு மாகாணத்தாருக்குக் கொடுக்கப்பட்டுவிடும் என்றும், அவருக்கும் கொடுக்க வசதிப்படாததானால், ஒரு கிறிஸ்தவருக்கோ, அல்லது முஸ்லிமுக்கோ அல்லது மங்களூர்க்காரனுக்கோ அல்லது மலையாளிக்கோ அல்லது ஆந்திரருக்கோ பெரிதும் வழங்கப்படுகிறதே தவிர, சுலபத்தில் ஒரு தமிழனுக்கு, அவன் எவ்வளவு தகுதியானவாய் இருந்தாலும் வழங்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டு, சில சமயங்களில் தமிழனுக்கு வழங்கப்படவேண்டிய அவசியம் வந்தபோது, அந்த உத்தியோகமே இருக்க வேண்டியதில்லை என்று செய்யப்பட்டிருக்கும் என்பது தனக்குத் தெரியும் என்று குறிப்பிட்டு, திராவிடனுக்கு மட்டும் தகுதி திறமை என்கின்ற முட்டுக்கட்டை ஏன் என்ற கேள்வியினை எழுப்புகின்றார் (Periyar. 1947).

இங்கு மேற்குறிப்பிட்ட வாதங்களின் அடிப்படையில் தந்தை பெரியார் அவர்கள் தெளிவாக 'திராவிடம்', 'திராவிடர்', என்பதனை பார்ப்பனீயக் கருத்தியலுக்கு நேர் எதிரான, தமிழரை குறிப்பாக சமூக-கலாச்சார வெளியினில் 'பார்ப்பனர் அல்லாத தமிழ் பேசும் ஒடுக்கப்பட்ட மக்களைக்' குறிக்கவே தந்தை பெரியார் அவர்கள் பயன்படுத்தினார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு இந்தியச் சமூக வெளியினில் புத்தொளி மரபின் தாக்கத்தினாலும், காலனியாதிக்கத்தின் புதிய பொருளாதார, கலாச்சார அறிமுகங்களாலும் பல சீறிய சமூக-கலாச்சார-பண்பாட்டு மாற்றங்கள் நிகழத் தொடங்கின. அந்த வகையினில் பார்பனக் கருத்தியலின் ஆதிக்கத்தினால் சாதியின் இருக்கத்தினில் பிடியுண்ட சமூகத்தினில் ஒரு புத்துணர்வாக பல்வேறு இனக் குழுக்களும் தங்களுக்கான இன மீட்சியினைப் பற்றிப் தங்களுக்கே உரிய வரலாற்று புரிதலில் பேசலாயினர். அந்தவகையினில் மகாத்மா ஜோதிராவ்-சாவித்திரி பாய் பூலே, பண்டிதர் அயோத்தி தாசர், பாபாசாகேப் அம்பேத்கார், தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அவர்கள் சமூகத்தினில் மதத்தின் பேராலும், பண்பாட்டின் பேராலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எந்தவொரு சமரசமுமின்றி பாடுபடலாயினர். இவர்களில் பண்டிதர் அயோத்தி தாசர், பாபாசாகேப் அம்பேத்கார், தந்தை பெரியார் போன்றோர்கள் 'திராவிடம், திராவிடர்' என்ற சொல்லாடலை ஆரிய-பார்ப்பனப் பண்பாட்டிற்கு மாற்றாக பயன்படுத்தினர். தந்தை பெரியார் அவர்களும் அவரின் கொள்கையின் பால் ஈர்ப்பு கொண்ட சுயமரியாதைக்காரர்களும் 'திராவிடம், திராவிடர்' என்ற சொல்லினை ஒரு பண்பாட்டு புரட்சிக்கான கருத்தியல் ஆயுதமாகவே பயன்படுத்தினர். தந்தை பெரியார் அவர்கள் 'திராவிடம், திராவிடர்' என்ற சொற்களின் மூலம் பார்ப்பனீயக் கருத்தியலினை ஏற்காத புறம் தள்ளிய தமிழ் மக்களைக் குறிக்கவே பயன்படுத்தினார். 'திராவிடர், திராவிடம்' என்பதனை பிறப்பின் அடிப்படையில் தந்தை பெரியார் அவர்கள் என்றுமே வரையறுக்காமல், சுயமரியாதை வாழ்விற்கான அடையாளக் குறியீடாகவே கையாண்டார் என்பது அவரின் எழுத்துக்களை காணும்பொழுது உறுதியாகின்றது.

## References


Aanaimuthu, V., (2009) Periyar E.V. Ramasamy Sinthanaigal, Volume 1-6, Nagammai Education Research Foundation, Chennai, India.

Periyar, (1947) Enna Elavu Oliya Islamea Nanmarunthu, Kudi Arasu Pathipagam, Chennai, India.

Rajadurai, SV., Geetha, V., (1999) Periyar: Suyamariyathai Samadharman, Vidiyal Pathippagam, Coimbatore, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License